விலை ரூபா: 5.00

பக்கங்கள் :- எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 14 செவ்வாய்க்கிழமை (30.07.2002) தொலைபேசி 3378 ஒலி 223




## வெல்லாவெளியில் ஆர்ப்பாட்டம்

# பொதுமக்கள் மீது பொலிஸார் சூடு!

## நால்வர் படுகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

**வெல்லாவெளிப் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு, கல்முனை மற்றும் களுவாஞ்சிக்குடி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

கடந்த 19ம் திகதி 14ம் கொலணியைச் சேர்ந்த ஒருவர் தாதக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மண்டூரப் பகுதி அபிவிருத்திக் குழுவைச் சார்ந்த பொன்னையா பேரின்பம் என்பவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதை அடுத்து அவரை விடுதலை செய்யக்கோரி அப்பிரதேச மக்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போதே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் மீது பொலிஸார் முதலில் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து வெல்லாவெளிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகின்றது.

(08ம் பக்கம் பார்க்க)



அச்சுவேலியில் ஜெயாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## வை. கோவின் கைதை கண்டித்து அச்சுவேலியில் கண்டன ஊர்வலம்

(திருநெல்வேலி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து நேற்று அச்சுவேலியில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கண்டன ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

அச்சுவேலி கதிரிப்பாய் வீதியில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் மு.ப 11 மணியளவில் அச்சுவேலி நகரப் பகுதியை வந்தடைந்தது. அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவி தீயிட்டு கொளுத்தப்பட்டது. (த-43)

## ரவி கருணாநாயக்காவின் அமைச்சுப் பதவி பறிக்கப்படும்

### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்காவினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கைப்பை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்து அவரது அமைச்சுப் பதவிக்கு உலை வைப்பதாக அமைந்துவிட்டது. அவரது பதவி எந்நேரமும் பறிபோகலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

அரசியல் சட்டத்தின் பிரகாரம் அமைச்சர் ஒருவரின் அமைச்சுப் பதவியை பறித்தெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதினால் அவ

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். வரும் சிங்கள முஸ்லிம் மக்கள் மாவீரர் இல்லங்களில் அஞ்சலி

(மந்திகை)

யாழ் குடாநாட்டை நோக்கி படையெடுத்துவரும் தென்னிலங்கை சிங்கள முஸ்லிம் உல்லாசப் பயணிகள் குடாநாட்டிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், போராளிகளின் நினைவாலயங்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பிறந்த வீடு ஆகியவற்றைப் பார்ப்பதிலும் படம் எடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு செல்லும் இவ் உல்லாசப் பயணிகள் உணர்வு பூர்வமாக அங்கு மலர் அஞ்சலி செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் துயிலும் இல்லங்களின் புனரமைப்புக்கும் தம்மால் இயன்றளவு நிதியுதவி அளிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

குடாநாட்டில் இவ் உல்லாசப் பயணிகள் நெல்லியடியில் அமைந்துள்ள கரும்புலி கப்டன் மில்லரின் நினைவாலயம், வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லங்கள் வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள குமரப்பா, புலேந்திரன்

(08ம் பக்கம் பார்க்க)

## சுவிற்சலாந்தில் தமிழர் திரண்டு

## அமைச்சர்களின் பதவியைப் பறிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு

## சுவிற்சலாந்தில் தமிழர் திரண்டு

## வை.கோவின் கைதுக்கு கண்டனம்

(பேர்ன்)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து சுவிற்சலாந்தின் நாடாளுமன்றம் முன்பாக நேற்று மாபெரும் கண்டனக் கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அனைத்துலகத் தமிழ் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் நாடாளுமன்றம் முன்பாக நடைபெற்ற இக் கண்டனக் கூட்டத்தில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் வை. கோ கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்தும், அவரை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும் வானதிர கோஷங்களை எழுப்பினர்.

இத்துடன் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் நடவ

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் மோதல்

### குற்றவியல் வழக்கின் கீழ் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசார்ணை நேற்று யாழ் நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த விசாரணையில் மேற்படி மாணவர்களின் மோதல் சம்பவத்தினால் பல்கலைக்கழகத்திற்கு ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 414 ரூபா 25 சதம் பெறுமதியான சொத்திழப்பு ஏற்பட்டதாக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையினால் மன்றிற்கு சேத விபர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி சேத விபரம் தொடர்பாக சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு சேத விபர அறிக்கையை அடுத்த மாதம் 19ம் திகதி நீதிமன்றில்

(08ம் பக்கம் பார்க்க)

## அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு

### பிரதமர் ரணிலுக்கு சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

அமைச்சர்களின் பதவிகளைப் பறிக்கும் அதிகாரமும், அமைச்சுக்களைப் பொறுப்பில் வைத்திருக்கும் அதிகாரமும், அரசியல் யாப்பின் அடிப்படையில் தனக்கு இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி இதனை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையை நியமிப்பது தொடர்பான பிரதமரின் விருப்பத்திற்கு ஒரு போதும் இணங்க முடியாது.

ஏனெனில் அமைச்சரவையை நியமிக்கும்போது, பிரதமரோடு இணக்கம் கண்டு அவர்களை நான் நியமிக்கவில்லை.

இந்த அடிப்படையில் அரசியல் யாப்பின் 47ஆவது சரத்து மற்றும் 44/03ஆவது சரத்தின் பிரகாரம் அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறதென்பது யாப்பு ரீதியாக ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

(08ம் பக்கம் பார்க்க)

## வேலணை பிரதானவீதி மீண்டும்

## பொதுமக்களின் பாவனைக்குத் தடை

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் பயன்படுத்தி வந்த வேலணை பிரதான வீதியை நேற்றுக் காலை 7.30மணி முதல் மீண்டும் கடற்படையினர் தடை செய்துள்ளனர். .இதனை அடுத்து பாடசாலைக்கு சென்ற மாணவர்கள், ஆசிரியர்கள் அவ் இடத்திலேயே மறியல் போரில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து சம்பவத்தை கேள்விப்பட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று கடற்படை அதிகாரி, விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இக் கலந்துரையாடலைத தொடர்ந்து மாற்றுவழி ஒன்றின் மூலம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதனை அடுத்து ஆசிரியர்களும், மாணவர்களும் அப்புதிய பாதையினால் பாடசாலைக்குச் சென்றனர்.

இது இவ்வாறு இருக்க கடற்

(08ம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கு இழைத்த துரோகத்தை நினைவுறுத்தும் ஜூலை 83 கலவரம்

## மறக்கமுடியாத நினைவுகளின் ஓர் மீள்பார்வை

1983 ஜூலைத் திங்கள் 23ம் நாள் அதிகாலை நேரம் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கும், பரமேஸ்வராச் சந்திக்கும் இடைப்பட்ட தபால்பெட்டிச் சந்திக்கருகாமையில் பயங்கரக் குண்டுச் சத்தம், அதனைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள். 13 சிறிலங்கா இராணுவத்தினர் உடல் சிதறிப்பலியானார்கள். இச்சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மான் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் முதலாவதாகநடைபெற்றகண்ணிவெடித் தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதலை அடுத்து யாழ். குடாநாடு பூராகவும் மயான அமைதி நிலவியது. விடியல் பொழுதில் என்ன நடக்குமோ என்ற அச்சம் மக்கள் மனதில் குடிகொள்ள மக்கள்அனைவரும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கொண்டனர்.

பொழுதுவிடிந்ததும் பலாலி யாழ் கோட்டை மற்றும் குருநகர் இராணுவ முகாம்களில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த இராணுவத்தினர் கண்டபடி சுட்டுக்கொண்டே சென்றனர் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு சிறுவர்கள், இளைஞர்கள் முதியவர்கள் என்று சுருண்டு விழுந்தனர். பலர்படுகாயங்களுக்குள்ளானார்கள் குடாநாடு எங்கும் ஒரேஅழுகுரல் பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, மானிப்பாய்வீதி, பருத்தித்துறைவீதி யாவும்வெறிச்சோடி மயானபூமியாகக் காணப்பட்டது.

உடல்சிதறிபலியான13 இராணுவ வீரர்களின் சடலங்கள் பொலித்தீன் பைகளில் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டுகனத்தை மயானத்தில் தகனத்துக்காக வைக்கப்பட்டிருந்தது

அப்போது ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகவும் ரணசிங்கபிரேமதாசா பிரதமராகவும் இருந்தனர்.

### கனத்தையில் தகனம் கலவரம் வெடித்தது

24ந்திகதி பிற்பகல் 3மணிக்கு கனத்தைமயானத்தில் கண்ணிவெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சிதறியஉடல்கள் தகனத்துக்காக தயாராகி இருக்கும் வேளையில் அப்போது பிரதமராகஇருந்த ஆர்.பிரேமதாசா உடல்சிதறிய இராணுவவீரர்களின் துண்டங்களைக்காட்டி மயானத்தில் குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஆவேசமாக இரங்கலுரை நிகழ்த்தினார். அப்போது அங்கு குழுமியிருந்த சிங்கள பேரினவாதிகள் தமிழ்மக்களின் இரத்தத்தைக்குடிக்கப் புறப்பட்டனர்.

தென்னிலங்கையில் 'நாடு தழுவியரீதியில் வன்முறைகள் வெடித்தது. அப்பாவித் தமிழ்மக்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன. அந்தணர்களை கொடித்தம்பத்தில் கட்டிவைத்து தீமூட்டி எரித்தனர். சிறுவர்களைக் குரூரமாகக் கொன்றுகுவித்தனர் அதன்மூலம் தம்முடைய இரத்தப்பசியை ஆற்றிக் கொண்டனர்.

ஜூலை மாதம் 25ம் திகதி அப்போதைய அரசின் ஆசீர்வாதத்துடன் அரங்கேறிய இப்படுகொலைகளுக்கும் மேலாக வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் 83ஜூலை 25ந்திகதி பிற்பகல் 2மணியளவில் கத்தி, வாள், மற்றும் கனரக ஆயுதங்களுடன் நுழைந்த கொலைவெறியர்கள் குட்டிமணி, தங்கதுரை' ஜெகன் உட்பட 35தமிழ்க் கைதிகளைகுரூரமாகவெட்டிக் கொன்றனர். இவர்களில் குட்டிமணி, ஜெகன் ஆகிய இருவரினதும் கண்கள் குரூரமான முறையில் தோண்டப்பட்ட நிலையில் அவர்களது சடலங்கள் சிறைச்சாலை வளாகத்திலுள்ள விகாரைக்கு அருகாமையில் அநாதரவாகப் போடப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் (ரெலோ) சேர்ந்த குட்டிமணி ஜெகன் ஆகிய இருவருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கும் போது ''இறுதியாக என்னகூற விரும்புகிறீர்கள் என்று நீதிபதி வினாவிய போது அவர்கள் இருவரும்; தங்களின் கண்களை கண்இல்லாத தமிழ் மகனுக்குக் கொடுக்கும்படியும் மலரப் போகும் தமிழீழத்தை அக்கண்களூடாக பார்ப்போம் என்றும் தெரிவித்தமைக்காகப் பழிவாங்கும் ஒருசெயலாக அவர்களது கண்கள் குரூரமான முறையில் தோண்டப்பட்டன.

**தமிழன்**

ஜூலை 27ஆம் திகதிதமிழ் மக்கள் கொல்லப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்ட பின்னர் ஜூலை 27ஆம் திகதி அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் வைத்திய கலாநிதி இராஜசுந்தரம் உட்பட 18தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் 18 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர்.

ஜூலை மாதத்தில் இத்தகைய படுகொலைகளை நடத்தவும் தமிழ் மக்களை கொன்றொழிக்கவும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்கும்வகையில் 1983ம் ஆண்டு ஜூலைமாதம் 18ம் திகதி வெளியான ''டெய்லி டெலிகிராப்'' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அப்போதைய ஜனாதிபதி அளித்த பேட்டியில் ''நான் இப்போது யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைப் பற்றியோ, நிலையைப் பற்றியோ கவலைப்படும் நிலையில் இல்லை...இப்போது நான் அவர்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றி அவர்கள்என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ சிந்திக்க முடியாதுஎன்றுதெளிவான சிந்தனையுடன்கூறியுள்ளார்.

இக்கூற்றானது 83ஜூலை மாதத்தில் இடம்பெற்றஇனக் கலவரத்திற்கும் சிறைப்படுகொலைகளுக்கும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

1983ஜூலை29ந்திகதி ரூபவாஹினியில் ஜனாதிபதி ஜே.ஆர்'ஜெயவர்த்தனா உட்பட ஐக்கியதேசியக் கட்சியின் ஏனைய தலைவர்களும் தோன்றி இந்நாட்டின்பெரும்பான்மை சிங்களமக்களின் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைகளுக்கும் ஓர்எல்லை உண்டுஎன்றும் கூறியிருந்தனர்.

இவை எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தமிழ் மக்களின் வாழ்க்கையில் 19வருடங்கள் என்ன எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் இவற்றைமறக்க முடியாது.

## கிளிநொச்சி ஆலயம் புனருத்தாரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தசுவாமி ஆலயப் புனருத்தாரண வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ் ஆலயப் புனரமைப்புக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் நிதியுதவி செய்துள்ளனர்.

பல இலட்சம் ரூபா செலவில் நடைபெறும் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஆவணி மாதமளவில் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடாகியுளளது. (ஷ-264)

## மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையார் ஆலய தேவஸ்தான மஹோற்சவம் இன்று கொடியேறறத்துடன் ஆரம்பமாகவுளளது.

எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள்வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெவுள்ளது.

மஹோற்சவ காலத்தில்தினமும் மாலை 6.30 மணிக்கு தெய்வீகப் பேருரைகள் இடம் பெறவுள்ளன. (ஷ)

## லொகான் விடுதலை

(கொழும்பு)

கடந்த பாராளுமன்றத்தேர்தல் காலத்தில் உடத்தலவின்னப் பகுதி வாக்குச் சாவடியில் வாக்குப் பெட்டிகளைக்கொள்ளையடித்தமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அனுருத்தரத்வத்தவின் புதலவர்லொகான் ரத்வத்த தெல்தெனிய நீதிமன்றினால் அவ்வழக்கில் இருந்து விடுதலைசெய்யப்பட்டுளளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக லொகான் ரத்வத்தைமற்றும்இராணுவத்தினர் உட்பட 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இன்மையால் லொகான் உட்பட 4பேர் விடுதலை செய்யப்பட்டனர். (உ)

## இளைஞர் யுவதிகளுக்கான அபிவிருத்திப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

கொள்கைசெயற்படுத்துகை அமைச்சினால் தொகுதிதோறும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிநெறிக்கு வேலணைப் பிரதேச செயலகம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

தொகுதிதோறும் 250 பேரைச் சேர்த்துக் கொள்ளும் இப்பயிற்சிநெறிக்கு க.பொ.த சாதாரணதரமும், அதற்கு மேலுள்ள தகைமையுடைய 18வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்விண்ணப்பம் செய்யலாம்.

இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சு ஆறுமாத காலப்பயிற்சி அளிக்குமெனவும், பயிற்சிக் காலத்தில் பயிற்சிக் கொடுப்பனவாக 2000ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களிடம் இருந்து இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அடுத்த மாதம் 5ம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் எஸ். இரத்தினம் அறிவித்துள்ளார். (ம)

## எழுதுமட்டுவாழில் மீளக்குடியமர அனுமதிக்க மக்கள் கோரிக்கை

எழுதுமட்டுவாழ் தெற்கு எழுதுமட்டுவாழ்வடக்கு, கரம்பகம், ஒட்டுவெளி மற்றும் படித்தமகளிர் குடியேற்றத் திட்டம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமென்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தம்மை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ள அப்பகுதி மக்கள் அனுமதி மறுக்கப்படின் அடுத்தமாதம் 7ந்திகதிமறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர்.

இதேவேளை இம்மறியல் போராட்டம் பற்றிஅடுத்த மாதம்4ந்திகதி முற்பகல் 10மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மண்டபத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளதாக எழுதுமட்டுவாழ் மக்கள் நலன்புரிச் சங்கம் அறிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் அப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (இ)

## ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்டவர் வை.கோ.

### கிளி. மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றம் அறிக்கை

(கிளிநொச்சி)

'ஈழத்தமிழர்களின் சுதந்திரத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் அயராது பாடுபட்டு வரும் வை.கோபாலசாமியை தமிழக அரசு கைது செய்துள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்படக் கூடியதொன்றாகும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட எம்.ஜி.ஆர் மன்றத் தலைவர் நா. வேலாயுதம், வை.கோ. கைதைக்கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எம்.ஜி.ஆர்., ஈழத்தமிழரின் இன்னல்தீரவும்சுதந்திரத் தமிழீழம் மலரவும்ஆக்க பூர்வமாகச்செயற்பட்டவர்எம்.ஜி.ஆரின்பெயரைச் சொல்லி ஆட்சி செய்யும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி ஈழத்தமிழரை எப்படியாவது ஒடுக்க கங்கணம் கட்டி நிற்கிறது.

இதன்பிரதிபலிப்பேவை.கோ. கைது சம்பவமாகும். ஜெயலலிதாவின் இந்நடவடிக்கை இன்றைய சமாதான முயற்சியைக் குழப்பும் செயலாகும். எனவே வை.கோ.வை உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்டு நிற்கின்றோம். என்றுள்ளது.

இதேவேளை மேற்படி மன்றம் வை.கோ.வை.விடுதலை செய்யக் கோரி அவசரமகஜர் ஒன்றினையும் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. (ஷ-264)

### விபத்தில் காயம்

சாவகச்சேரியில்மோட்டார் சைக்கிளும் ஆட்டோ ஒன்றும் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த இளைஞர் படுகாயமடைந்தநிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த கோபாலபிள்ளை திருக்குமரன் (வயது 22) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். (வ-6)

# தேக்கமடைந்த சமாதான முயற்சிகள்

# மிலிந்த- பாலா சந்திப்பால் புத்தூக்கம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்கைச்சாத்தாகி160நாட்களை நெருங்கும் சமயத்திலும் சமாதான முயற்சிகள் தேக்க நிலையில் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகி எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் 160 தினங்கள் பூர்த்தியடைகின்றன.

இருப்பினும் ஒப்பந்தம் கைச்சாத்தானபோதுஅதனை நடைமுறைப்படுத்துவது குறித்து காட்டிய வேகம் தற்போது இல்லை

பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான போது ஏப்ரல் மாதத்தில் அரசு—புலிகள் சமாதானப் பேச்சு தாய்லாந்தில் இடம்பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இற்றைவரை அதற்கான திகதி சரியான முறையில் குறிப்பிடாது நீண்டு செல்கிறது இது மக்களிடத்தில் முன்பிருந்த ஆர்வத்தைக் குறைத்துசலிப்புத் தன்மையை ஏற்படுத்தி வருகிறது.

ஒப்பந்தத்தின் பிரகாரப் யாழ்-கண்டி ஏ-9 வீதி கடந்த எப்ரல் 8ஆம் திகதி புலிகளின் இணக்கத்துடன் திறக்கப்பட்டது.

அத்துடன் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரும் பொதுஇடங்களில் இருந்துவிலகிவருகின்றனர்.

வடகிழக்கு மாகாணத்தில் பொது இடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் மிகமெதுவாகவே வெளியேறி வருகின்றனர்.

இது,பொதுமக்கள் மற்றும் விடுதலைப்புலிகள் மத்தியில் அதிருப்தியான நிலையை உருவாக்கியுள்ளதுடன், சில சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.

இது இவ்விதமிருக்க ஓகஸ்ற் 2 ஆம் திகதிக்கு முன்னதாக வடக்கு - கிழக்கில் பொது இடங்களில் நிலைகொண்டுள்ள படையினர் முற்றாக வாபஸ்பெறப்படுவர் எனபிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம்உறுதியளித்தபோதிலும், பின்னர் அமெரிக்கவிஜயத்தின்போது வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவ்வளவு விரைவாகச்சாத்தியப்படாது என்ற ரீதியில்கருத்துகூறிஇருந்தார்.

தவிரவும், வாகரை மற்றும் இரணைதீவுக், கடற் சம்பவங்கள் மற்றும் தீவகத்தில்புலிகள் மீதான தாக்குதல் போன்ற சில சம்பவங்கள் ஒப்பந்தத்துக்கு முரணாக இடம்பெற்றுள்ளபோதிலும் அவை பெரிதாக ஒப்பந்தமீறல்கள் என்று கூறுவதற்கு இல்லை.

இந் நிலையில் பொருளாதாரமறுசீரமைப்பு,விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொரகொட கடந்த சனியன்று லண்டனில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இது சலிப்படைந்த உள்ளங்களுக்கு உற்சாகமூட்டுவது போல அமைந்துள்ளது.

இந் நிலையில் இவ்வாரம் பேச்சுக்கான திகதி மற்றும் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்த முக்கிய முடிவுகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிலையில், பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறுவதில் பல்வேறு சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதால் இது விடயத்தில் புலிகள் சற்று தளர்வுப் போக்கை கைக்கொள்ள வேண்டும் எனவும் அரசுத் தரப்பில்எதிர்பார்க்கப்படுகிறது

போர் நிறுத்தத்தை மீறுவதற்கான அக, புறச் சூழல்கள் இருதரப்பிலும் இற்றை வரை அவதானிக்கப்படவில்லை எனவும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (உ)

# சிறைக்கைதியிடம் இருந்து ஹெரோயின் மீட்பு

## வெலிக்கடையில் சம்பவம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த கைதி ஒருவரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை சிறைச்சாலை அதிகாரிகள் நேற்றுக் காலை கைப்பற்றியுள்ளனர்.

சிறை அதிகாரிகளால் மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் அளவு 100 கிராமுக்கும் அதிகம்என அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்டசிறைக்கைதி நேற்றுக்காலைநடந்துகொண்டவிதம் குறித்து சந்தேகம் எழுந்ததையடுத்து கைதி தொடர்பான உடைமைகளை சோதனையிட்டபோதே ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறைக்காவலாளி ஒருவரே ஹெரோயின் போதை பொருளை குறிப்பிட்ட கைதிக்கு வழங்கினார் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்படி கைதி கொழும்பு போதைவஸ்து ஒழிப்புப்பிரிவினரிடம்கையளிக்கப்பட்டுள்ளார். (உ-8)

# கிளி. பாடசாலைகள் விளையாட்டில் சாதனை

(கிளிநொச்சி)

மாகாண மட்ட 19 வயது கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பெண்கள்பிரிவில் இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை இப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, மாகாண மட்ட 19 வயதின் கீழ்ப்பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளி. சிவ நகர் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.(உ-264)

# கல்வித்துறை சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு 3 வார வெளிநாட்டுபயிற்சி

(கொழும்பு)

உலக வங்கியின் பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ் கல்வித்துறை சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு 3 வார குறுகிய காலப் பயிற்சித் திட்டதின் கீழ் வெளிநாடுகளில் பயிற்சியளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட 10 சிரேஷ்ட கல்வி அதிகாரிகள் அடங்கிய முதலாவது தொகுதியினர் கடந்தவாரம் சிங்கப்பூர்,தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளுக்குப் பயிற்சிக்காகச் சென்றுள்ளனர். (உ)

# கண்ணிவெடிஅகற்றும்பணி மன்னாரில் ஆரம்பமாகும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 21 கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக பரப்பான் கண்டல், நல்லவராஜன் கட்டை, அடம்பன், சிலாவத்துறை,பேசாலை,தம்பணைக்குளம், மொங்காலை, தலைமன்னார் ஆகிய கிராமங்களிலேயே அதிகளவான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சமாதான சூழ் நிலையில் இப்பகுதி மக்களை மீளக் குடியமர்த்தும் நோக்குடன் அங்குள்ள கண்ணி வெடிகளை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பொறுப்பை 'கலோறட்ஸ்' நிறுவனம் பொறுப்பேற்றுள்ளமை. குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் வி. விஸ்வலிங்கமும்,மன்னார் இராணுவ கட்டளை அதிகாரிகளும் கலோறட்ஸ் நிறுவன கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதை அடுத்து,

அடுத்த மாதம் முதல் கண்ணி வெடிகள் மீட்பு பணிகள் மன்னாரில் ஆரம்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கன. (உ-8)

# ஜனாதிபதியின் கைப்பை விவகாரம்

# சான்றாதாரங்கள் அகப்பட்டன

(கொழும்பு)

அதியுயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஒளிப்பதிவு கருவிகளடங்கிய கைப்பை கடந்த டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதி பாதுகாப்பு ஆலோசகர் ரி.வி.சுமனசேகரவினால் நேரில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதற்கு சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன.

சர்ச்சைக்குரிய வி. எச்- 09 வீடியோ கமராமறைத்து வைக்கப்பட்ட கைப்பை பற்றிய விபரங்கள் தொடர்பாக உள்நாட்டு புலனாய்வு பணிப்பகம் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

**General Engineers and suppliers** நிறுவனததைச் சேர்ந்த ரொஷான் மோத்தா என்பவரிடமிருந்து 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதிவிலைவிபரம்பெறப்பட்டுபின்னர்டிசம்பர்-14 இல் இது கொள்வனவு செய்யப்பட்டு டிசம்பர் 20 ஆம் திகதி ஜனாதிபதியிடம் மேற்படி கைப்பை கையளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சார்ஜன்ற் சந்திரசிறி (3498) என்பவரால் குறித்த தொழில் நுட்பக் கிளையின் கோவையில் இக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இதனை அமைச்சரவைக் கூட்டத்திற்கு கொண்டு வருவதாக ரவி கருணாநாயக்கா குற்றம் சாட்டினாராயினும் ஜனாதிபதி இதனை அமைச்சரவைக்கு காட்டவில்லை.

பின்னர் 48 மணித்தியாலங்களின் பின் குண்டு பற்றிய குற்றச்சாட்டில் இருந்து தன்னை விடுவிக்க முயற்சி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது,

இதேவேளை, சுமனசேகர சி.ஐ.டி.யினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

# ஊடகச் சுதந்திரத்தை நசுக்குகிறார் ஜனாதிபதி மீது கண்டனத்தீர்மானம்

## ஐ.தே.க. கூட்டத்தில் நிறைவேற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா ஊடகச் சுதந்திரத்தை நசுக்குவதற்கு முற்படுவதாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கூட்டமொன்றில் ஜனாதிபதி மீது குற்றம் சுமத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலநறுவையில் நடைபெற்ற பொது ஜனஐக்கிய முன்னணியின் கலந்துரையாடல் ஒன்றில் இடம் பெற்ற சம்பவங்களை தனியார் தொலைக்காட்சி ஒன்றுஒளிபரப்பியதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ்பாக் கீர் மாக்காரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியதுடன், தன்னை வந்து சந்திக்குமாறும் கோரியிருந்தார்.

இதனையடுத்து ஐக்கிய தேசியக்கட்சி மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் ஊடகத் துறைஅமைச்சுப் பொறுப்பை தனக்குக்கீழ் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி தயாராகி வருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (ம)

# தொடர்புசாதன துறையில் பாரிய மாற்றம் ஏற்படும்

## அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல மாவட்டங்களிலும் தொலைபேசிச் சேவையை விஸ்தரிப்பதற்கும் தபால் சேவையை மறுசீரமைப்பதற்கும் சட்டதிட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் தெரிவித்துள்ளார்.

இவற்றைச் சீர்செய்வதற்கு அரசு பூரண ஆதரவுவழங்கும். இருமாத காலத்துள் மக்கள் தொடர்பு சாதனத்துறையில் பாரிய மாற்றங்கள்கொண்டு வர உத்தேசித்துள்ளதாகவும்,

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் தந்தித் தொலைத் தொடர்பு நிறுவனமுறை முற்றாக மாற்றியமைக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ-8)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சேர் பொன். இராமநாதன் வீதி திருநெல்வேலியிலுள்ள பவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி வியாழக்கிழமையும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4.30 மணிக்கு சுவாமி பிரபாகரானந்தா சரஸ்வதி ஆச்சார்யா (சனாதானஏகோபன சமிதி) மும்பை அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஷ)

# கிளி. வர்த்தகசங்கம் கண்டனம்

(கிளிநொச்சி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கைதுசெய்யப்பட்டமையைக்கண்டித்து கிளிநொச்சி வர்த்தகசங்கத் தலைவர் இ. சரவணபவானந்தன் கண்டன அறிக்கைஒன்றை விடுத்துள்ளார். (ஷ-264)

# உற்சவம் ஆரம்பம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்துமாரிஅம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறவுள்ளது. 9 ஆம் திகதி இரதோற்சவமும் 10 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் காரை எம். பி. அருளானந்தனின் 'தேவி பாகவதம்' என்னும் பொருள் பற்றிய தொடர் சொற்பொழிவு இடம் பெறும். (க-79)

# 10 இலட்சம் குடும்பங்களின் நிவாரண உதவிகள் நிறுத்தப்படலாம்

(கொழும்பு)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண ஒழுங்கு முறையில் நடைமுறைப் படுத்துவதற்காக சட்ட ரீதியான அதிகாரங்களைக் கொண்ட புதிய நிவாரண உதவிச்சபைஅமைக்கப் படவுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக 10 இலட்சம்குடும்பங்களின் நிவாரண உதவிகள் இல்லாமல் போகும் என நிதி அமைச்சின் முதுநிலை அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உதவிகள் இலவச பாடசாலைப் புத்தகங்கள் இலவசமாணவர்சீருடைத்துணிகள், இடம்பெயர்ந்த வர்களுக்கான நிவாரணம் உட்பட அமைச்சுக்கள் மூலமும், உள்ளூர் அதிகாரசபைகள் மூலமும் வழங்கப்படும் உதவிகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 50 இலட்சத்திற்கும் மேலாகும்.

நிவாரணங்களைப் பெறும் வருமான எல்லைக்கு மேல் உள்ளவர்களின் நிவாரண உதவிகள் புதிய நடைமுறை மூலம் நிறுத்தப்படவுள்ளது.

புதிதாக அமைக்கப்படும் நிவாரண உதவிச் சபைமூலம் நிவாரணத்தை பெறத் தகுதியுள்ள குடும்பங்களாகமாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா விற்கும் குறைவான வருமானத்தைப் பெறும் குடும்பங்களே கணிக்கப்படும். இவ் வருமான எல்லையை கணிக்கும் பொழுது குடும்பங்களில் சொத்துக்கள் மதிப்பிடப்படவுள்ளன.

நிவாரணம் பெறத் தகுதியுள்ள குடும்பங்களின் பட்டியல் பார்வைக்கு வெளியிடப் படுவதுடன், நிவாரணச் சபைக்கு ஒரு ஆணையாளரும் நான்கு உறுப்பினரும் நியமிக் கப்படுவதுடன், சபையின்தீர்மானங்களை மாவட்ட செயலாளரும், பிரதேசசெயலாளரும் நிறைவேற்றுவர்.

புதிய நடைமுறைப்படி ஏழைகள் மட்டுமே நிவாரணங்களைப் பெறுவர் புதிதாக நிவாரணம் பெறத் தகுதியுள்ள குடும்பங்கள் பற்றியும் கவனத்தில் கொள்ளப்படும். நிவாரண உதவிகளைப் பெறும் சபை நிதி அமைச்சின் கீழ் இயங்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-225)

## அடுத்த மாதம் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

திருமலையில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக் கப்படுவது தொடர்பாக அடுத்த மாத நடுப்பகுதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளது.

110 மெஹாவாட்ஸ் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் இந் நிலையத்தை அமைப்ப தற்கு 240 கோடி அமெரிக்க டொலர் தேவையென மதிப் பிடப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் சுவிஸ்சர் லாந்து ஆகிய நாடுகளின் கூட்டுதவியுடன் இது அமைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

(உ)

## இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை சொந்த இடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் சாவகச் சேரிக் கிளை எதிர் வரும் ஓகஸ்ற் மாதம் 5 ஆம் திகதி முதல் கண்டி வீதியில் சாவகச் சேரி பழைய சந்தைக்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

இதேவேளை, இடம் பெயர்ந்து அச்சுவேலியில் இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை இயங்கிய இடத்தில், இலங்கை வங்கியின்சுன்னாகக் கிளையின் நீடித்த கருமபீடம் அன்றைய தினம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் இலங்கை வங்கி உப கிளை ஒன்று விரைவில் திறக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-2)

## இலவச சீருடை விவகாரம் விளக்கம் தருமாறு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக் கான இலவச சீருடைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம்குறித்து உடன் விளக்கம் தருமாறு கல்வியமைச் சின் செயலாளருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தர விட்டுளார்.

கல்வியமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட இலவச சீருடை தொடர்பான அறிக்கையை பரிசீலனை செய்வதற்கு மூவர்கொண்ட விசேடகுழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுதொடர்பாக கல்வியமைச்சு செயலகங்களில் ஏற்பட்ட குழப்ப நிலையை நிவர்த்தி செய்வதற்கு ஏற்றநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஷ-8)

## முரளிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

உலகத்தரத்து வேகப்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற் கொள்ள கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை தீர்மானம் எடுத்துள்ளது.

கடந்தவாரம் ரூபவாஹினிக்கு அளித்த செவ்வியில் அனாவசியமாக சிலகருத்துக் களைக் கூறியமையால் மேற்படி விசாரணைக்கு முரளிதரன் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதற்கென ஐவர்அடங்கிய குழுநியமிக்கப்பட்டிருப்பதாகவும், அவரின் அபிப்பிராயம் சம்பந்தமாக வினாவப்பட விருப்பதாகவும் அறியவருகின்றது.

மேற்படி விசாரணைக்குழு முரளிதரனுக்கு போட்டித் தடை அல்லதுதண்டம் விதிக் கலாம் என கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில்28 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளஇலங்கைபங் களாதேஸிக்கு இடையிலான 2வது பரீட்சார்த்தப் போட்டியில் முரளிதரன் பங்கேற்க வும் கிரிக்கெட் தெரிவுக் குழு இடமளிக்கவில்லை.

(உ-225)

## இராசி பலன்

30-07-2002
(ஆடி 14, செவ்வாய்)
சஷ்டி ந.இ.11.32வரை
உத்தரட்டாதி காலை
6.32 வரை
ரேவதி முழுவதும்
ராகுகாலம் - 3. 03.4. 33
நல்லநேரம் - 10. 32-12 .03
அமிர்தசித்தம், இரண்டாவது
ஆடிச் செவ்வாய்

**மேடம்**
உணர்ச்சிவசப்படுதல், சிறு வியாதி, காரிய தாமதம், பிரயாணம்.

**இடபம்**
தெய்வ சிந்தை, கீர்த்தி. முயற்சிகை கூடும், மன மகிழ்ச்சி.

**மிதுனம்**
இஷ்டசித்தி, நல்ல செய்தி, கடுமையான பிரயாசை, பிறர் உதவி.

**கடகம்**
வயிற்றுக்கோளாறு, புதிய தொழில் சிந்தை, காரியதாமதம், உறவினர் சந்திப்பு.

**சிங்கம்**
திருடர்பயம், போசன சுகம், காரியதடங்கல், பிரயாணபயம்.

**கன்னி**
சுவாரஸ்யம், ஆரோக்கியம், முயற்சிபலிதம், பொருள் சேர்க்கை.

**துலாம்**
தேக ஆரோக்கியம், செய் தொழில் விருத்தி, கல்நதுரையாடல், நல்லசம்பவம்.

**விருச்சிகம்**
பிரயாணம், இனசன தொடர்பு, சொத்துக்களால் கவலை, வியாபார நன்மை.

**தனுசு**
தொழில்கஷ்டம், மனச் சோர்வு, காரியதாமதம், வாகன பயம்.

**மகரம்**
சகோதரர் உதவி, குடும்ப குதூகலம், காரியநன்மை, பொருள்சேர்க்கை.

**கும்பம்**
தனவிரயம், வேலைக்கஷ்டம், வீண்வார்த்தை, உடல் நலக்குறைவு.

**மீனம்**
பெரியோர் சந்திப்பு, சயன சுகம், தெய்வசிந்தை, உடல் நலம்.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

வளவன்

## படையினர் ஒழுக்கம் பேணுவது அவசியம்

### 'விஜயபாகு' கட்டளை அதிகாரி

(கொழும்பு)

இராணுவ வீரர்கள் ஒழுக் கத்தைக் கடைப்பிடித்து மக் கள் மத்தியில் நல்ல மதிப்பைப் பெற வேண்டும்.

இராணுவ விட்டோடிகள் சிலரின் முறையற்ற செயல் களால் முழு இராணுவத்தினரையுமே பொது மக்கள் சந்தேகக் கண் கொண்டு நோக்குகின்றனர்.

விஜயபாகு இராணுவப் படையணியில் புதிதாகப் பயிற்சிபெற்ற 277 இராணுவத்தினருக்கு விருது மற்றும சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் இடம் பெற்ற போது, அதில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்ட படையணியின் கட்டளை அதிகாரி டி.யு. முனசிங்க இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

படையினர்க்கு படைப் பயிற்சியுடன் ஏககாலத்தில் ஒழுக்கப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

படையினர் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள அபிப் பிராயத்தை மாற்றுவது அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குளப்பிட்டிச் சந்தியில் ஆட்டோவும் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில், சைக் கிளில் சென்றவர் காய மடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அராலி தெற்கைச் சேர்ந்த ஐ. மகேஸ்வரன் (வயது 29) என்பவரே காயமடைந்தவரா வார்.

(உ-6)

## அமெ. துறவியால் நாளை பசுவின் படம் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்குவிஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இந்து சமயத்துறவி சுவாமிஜி ஸ்ரீமத்தந்திரதேவ மகராஜ் நாளை புதன்கிழமை காலை 9 00மணிக்கு யாழ் நகர் சத் திரத்து ஞானவைரவர் ஆல யத்தில் (பசுவின்) படம் திரை நீக்கம்செய்து வைத்து சொற் பொழிவு பஜனை ஆகியவற் றையும் நிகழ்த்துவார்.

நண்பகல் 12 30மணிக்கு மல்லாகம் ஐயனார்கோவிலில் வறிய மாணவர்களுக்கு அப் பியாசப்புத்தகம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வார்.

பிற்பகல் 2.30மணிக்கு வட இந்துப்பேரவையின் உப பணி மனையில் இந்து சமய பிர முகர்களைச் சந்திப்பார். மாலை5 00மணிக்கு அராலி தெற்கு களவத்துறை ஞான வைரவர் ஆலயத்தில் ஊர்வ லம் சொற்பொழிவு, பஜனை அருளாசி வழங்கும் நிகழ்வு களிலும் கலந்து கொள்ளவுள் ளார்.

நாளை யாழ் விஜயத்தை முடித்துக் கொள்ளும் சுவாமி கள் வியாழக்கிழமை காலை கிளிநொச்சி, முருகண்டி விநா யகர் ஆலயம் ஊடாக திரு கோணமலை திரும்பவுள் ளார்.

(ஷ)

## ஆலய புனரமைப்பு பூர்த்தி

(மானிப்பாய்)

வட்டுக்கோட்டை அடைக் கலம் தோட்டகந்தசாமிஆலய கட்டட புனரமைப்பு வேலை கள் பூர்த்திபடைந்தநிலையில் தற்போது வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

இவ் ஆலயத்திற்கு கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் வடக்கின் புனர்வாழ்வுஅமைச் சினால் 4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(ஷ-232)

## தேர்த்திருவிழா

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் மகமாரி அம்மன் ஆலய வருடாந்ததேர்த்திருவிழா அடுத்த மாதம் 10 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும்இடம்பெறும்.

(ஷ-225)

## மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

இலங்கை தேசிய கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் ஆதரவில் ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் அண்மையில் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடத்தப் பட்டது.

மேற்படி தலைமைத்துவ பயிற்சிக்கருத்தரங்கில் ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்த 6 பாடசாலைகளின், 30 மாணவத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபர் சங்கத் தலைவர் எம். எப். அல்பேட் தலைமையில் இடம்பெற்றமேற்படி தலைமைத்துவப் பயிற்சியில் மாணவத்தலைவர்களுக்கு ஊர்காவற்றுறை பங்குத் தந்தைவண. பிதா எ. ஞானப் பிரகாசம் அடிகளார், தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோச கர் த. தர்மராசா, என. சி. உமாகாந், வேலணை மத்திய கல்லூரிஅதிபர் பொ. அருணகிரி நாதன் மற்றும் வி. ஆர். ஜெயால்ட் அன்ரனி ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர்.

(உ-75)

## வலி மேற்கு பிரதேச சபை புது மெருகு

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை கட்டட திருத்த வேலை கள் இடம்பெற்று வருகின் றன.

புதிய தலைவராக வே. மகேந்திரன் பதவியை பொறுப்பேற்றதன் பின்பு பிர தேசசபையின் கட்டடத்திற்கு வர்ணப் பூச்சு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத் துடன் பிரதேச சபைக்கான பிளாஸ்ரிக்கிலான புதிய பெயர்ப் பலகையும் அமைக் கப்பட்டு வருகிறது.

மேலும் இவ் வேலைத்திட் டம் சுமார் 18 வருடங்களின் பின்பு மேற்கொள்ளப்படுவ தாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-232)

## பதில் பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(உடுவில்)

அழகியல் மற்றும் தொழில் நுட்ப பாடங்களுக்கு இவ் ஆண்டு இரண்டாவது தடவை யாக தோற்றும் பரீட்சார்த் திகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென பதில் பரீட்சையாளர் நாயகம் அறி வித்துள்ளார்.

இதேவேளை மேற்படி பாடங்களுக்கு இவ்வருடம் முதல் முறையாக தோற்றும் பரீட்சார்த்திகள் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவேண் டியதில்லை எனவும் பாட சாலை மட்டக் கணிப்பீடே பயன்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

(க-261-19)

# இன்று ஒரு தகவல்

## போரும் சமாதானமும்

இந்த உலகத்தில் எல்லாரும் அனேகமாக சமாதானத்தைப்பற்றித்தான் பேசுகிறார்கள். ஆனால்அப்படிப் பேசிக்கொண்டே அவர்களுக்குள் சண்டைபோட்டுக்கொண்டிருப்பார்கள், மிகவும் வேடிக்கையான உலகம். ஏன்தான் இப்படிச் சண்டைபோடுகிறீர்கள் என்று கேட்டால், ''நாங்கள் சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காகச் சண்டைபோட்டுக்கொள்கிறோம்'' என்று அதற்குவிளக்கம் கொடுக்கிறார்கள். அதன்பின் அவர்களிடம் எதைப் பேசுவது? உலகத்தில் மனித குணம் குறைத்துகொண்டேவருகிறதோ? என்று யோசித்துக்கொண்டுஇருந்தபோது, ஒரு பெரியவர் எழுதியிருந்த கட்டுரை ஒன்று கண்ணில் பட்டது.

இரண்டாவது உலகயுத்தம் முடிந்த சமயத்தில் அவர் ஒரு நாவலைப் படித்தாராம். அந்த நாவலை எழுதியவரின் பெயர் அவருக்கு ஞாபகத்தில் இல்லையாம்... ஆனால் நாவலின் பெயர் ஞாபகத்தில் இருக்கிறது.. ''ஏப் அன்ட் எஸென்ஸ்'' அந்தக்கதை என்ன என்பதை அவர்சுருக்கமாகச் சொல்லியிருந்தார். அதைத்தான் இப்போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.

''ஹாலிவுட்டில் இருக்கிற ஒரு சினிமா ஸ்ரூடியோ! அதற்கு எதிரில இரண்டு சினிமா ஆசாமிகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். காந்தி மகான் அமரரான நாள் அது அதைப் பற்றி அவர்கள்பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரூடியோவிலிருந்து குப்பை ஏற்றிக்கொண்டுவந்த லொறி ஒன்று அவர்கள் முன் திரும்புகிறது. அப்படித்திரும்பிய வேகத்தில் குப்பைக்காகிதங்களின் உள்ளேயிருந்து இரண்டு புத்தகங்கள் நழுவி கீழே விழுகிறது. இவர்கள் எழுந்து ஓடிப்போய்அவற்றை எடுத்துப் பார்க்கிறார்கள். வில்லியம் டாலிஸ், என்ற எழுத்தாளர் எழுதிய திரைக்கதை அது. சினிமா எடுப்பதற்கு லாயக்கில்லை என்று முடிவுபண்ணிக் குப்பைத் தொட்டியில், போட்டிருக்கிறார்கள். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் ஏப் அன்ட் எஸென்ஸ் என்று அதற்குத் தலைப்புக் கொடுத்திருக்கிறார் அந்த எழுத்தாளர் டாலிஸ். இவர்கள் அதைப் படித்துப் பார்க்கிறார்கள். அந்தத்திரைக்கதை மிகவும் அருமையாக இருக்கிறது.இவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கிற அந்த எழுத்தாளரை நேரில்பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

அந்தக் கையெழுத்துப் பிரதியில் அவர் விலாசம் இருந்தது அதை வைத்து அவரைத் தேடிக்கொண்டு போகிறார்கள். அந்த எழுத்தாளர்பெரிய மேதையாகவும் உயர்ந்தநிலைமையிலும் இருப்பார் என்று நினைத்துப் போகிறார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு சின்ன வீடு அதற்குப்பின் உள்ள ஒரு ஸ்ரோர் ரூம்தான் அந்தப் புத்தகத்தில் இருந்த விலாசம் வீட்டுக்காரரிடம் விசாரித்திருக்கிறார்கள், அந்த எழுத்தாளரைப்பற்றி அவர் ஏதோ மிகவும் வெறுப்பாகப் பதில் சொன்னாராம். அவ்வளவு எரிச்சல்.

அங்கே இருந்த அவருடைய சொந்தக்காரப்பெண் ஒருத்திதான் அந்த எழுத்தாளரைப் பற்றிய விபரங்களைச் சொன்னாளாம்.அந்தச் சிறிய அறையில் பசியும் பட்டினியுமாகக் கிடந்தடாலிஸ்ஸின்நிலைமை அவருடைய பழக்க வழக்கம் ஐரோப்பாவில் மேடை நடிகையாக இருந்த அவருடைய காதலி, அவளோடு வாழ்வதற்காகப் பணம் சம்பாதிப்பதற்காக டாலிஸ் அமெரிக்கா சென்றமை, முயற்சியெல்லாம் வீணாகப்போனமை கடைசியில் அந்த எழுத்தாளர் எங்கேயோ காணாமற்போனமை போன்ற எல்லா விபரங்களையும் அந்தப் பெண் விபரமாகச் சொல்லியிருக்கிறாள்.

அதைக்கேட்டதும் இந்தச் சினிமா ஆசாமிகளுக்கு மனது என்னவோ மாதிரி ஆகிவிட்டது. எங்கே போயிருப்பார் அந்த எழுத்தாளர்? சரி - - - - அதைப் பின்பு பார்க்கலாம் என்று அவர் எழுதிய ஏப் அன்ட் எஸென்ஸ் என்கின்ற திரைக்கதையைப் படிக்கிறார்கள். படிக்கப்படிக்க அது கண்முன் படம் மாதிரி தெரிகிறது அவ்வளவு அபூர்வமாக எழுதியிருக்கிறார். இப்போது நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு அந்தக் காட்சியைப்பாருங்கள்:

'குரங்குகள் கூத்தாடிக் கொண்டிருக்கின்றன. யுத்த நினைவுகளை அவை ஏற்படுத்துகின்றன. நடுவில் ஐன்ஸ்டீன் பரிதாபமாகத் தவித்துக் கொண்டு நிற்கிறார். குரங்குகள் சேர்ந்து கொண்டு அவரை ஒரே அமுக்காக அமுக்கி விடுகிறது. எங்கும் இருள், அமைதி, மூன்றாவது மகாயுத்தம் முடிந்து நிலவுகிற அமைதி அது. உலகம் முழுவதும் காலி, மனிதரே கிடையாது. ஒரேயொரு சிறிய தீவு மட்டும் அப்படியே இருக்கிறது. ஒருதாவரசாஸ்திரி, ஒரு பெண் இன்னும் இருவர் படகில் அங்கேயிருந்து புறப்பட்டு வருகிறார்கள், புதிய உலகம் அவர்களை வரவேற்கிறது. அங்கு இருப்பவர்கள்விசித்திரமானமனிதர்கள்: சாத்தானைத் தெய்வமாகக் கும்பிடுகிறார்கள். அவர்களிடம் இவர்கள் மாட்டிக் கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடைசியில் ஒரு வழியாகத் தப்பி ஓடி வருகிறார்கள்.

ஓர் இடத்தில்இடிந்துபோன கட்டிடங்கள், தெருவில் அனாதையாக நிற்கிற கார்கள், சிதறிக் கிடக்கிற மண்டை ஓடுகள், மிகப் பிரபலமானவர்களின் உடல்கள் எல்லாம் அங்கு அலங்கோலமாகக் கிடக்கின்றன. எல்லாவற்றையும் இவர்கள் பார்க்கிறார்கள். உலகத்தைச் சாத்தான் ஜெயித்துவிடுகிறான், ஆறு விரல், ஏழுவிரல் உள்ள மனிதர்களையெல்லாம் உண்டாக்கிவிடுகிறான். கடைசியில் அந்தத் தாவர சாஸ்த்திரியின் கார் பயங்கர மனிதர்களுடைய எல்லையைத் தாண்டிப் போகிறபோது, வீதி ஓரத்தில் ஒரு சமாதியைப் பார்க்கிறார்கள். அதுயாருடையது என்று கிட்டப் போய்ப்பார்த்தால் ... அதுதான் அந்தத் திரைக்கதையை எழுதிய ஸ்டாலிஸ்ஸின் சமாதி, இவர்கள் அந்தச்சமாதி மேல் இரண்டு முட்டைகளை உடைத்து அஞ்சலி செலுத்திவிட்டு மேலே போகிறார்கள். திரைவிழுகிறது. அந்தப்புத்தகமும் இத்துடன் முடிந்துவிடுகிறது

இதுதான் இன்றைக்கு நான் உங்களிடம் சொல்லவேண்டும். என்று நினைத்தவிஷயம். இந்தக் காலத்தில் நடப்பதை நினைத்துப் பார்த்தால் எதிர்காலத்தில் அந்தக் கதை உண்மையானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்த உயிர் அவஸ்தைப் படுவதை இப்போது மனிதன் ரசிக்க ஆரம்பித்துவிட்டான் சார். ஒரு பஸ் விபத்து. அதில் ஒருவனின் கை போய்விட்டது. துண்டாகக் கையை இழந்தவன் வலிதாங்காமல்

(6-ம் பக்கம் பார்க்க)

# வரலாற்றுச் சுவடுகளை இழந்தால் எமது இனத்தின் வரலாறும் அழியும்

## சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

எமது வரலாற்றுச் சுவடுகளை இழப்போமானால் வரலாறு இல்லாத இனமாக மாற்றப்படுவோம்

சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

மாமனிதர் கலைஞானி அ. செல்வரத்தினத்தின் 69 ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் புனித பரியாள் வித்தியாலயத்தில் மாமனிதர் கலைஞானி அருங்காட்சியக இயக்குநர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் நடைபெற்றபோது நினைவுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

வரலாற்று ரீதியான தமிழரின் வரலாற்றுச் சுவடுகளை இழக்கக்கூடாது. ஒரு தேசிய இனத்தின் அடையாளங்களில் அவ்வினத்தின் வரலாறும் ஒன்றாகும்: எனவே வரலாற்றுச் சுவடுகள் பேணப்படுவது அவசியமாகும்.

நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாத காலகட்டத்தில் கூட கலைஞானி அவர்கள் வரலாற்று ஆதாரங்களின் தேவைப்பாட்டை பிரக்ஞை பூர்வமாகப் பார்த்து ஆவணப் படுத்தலில் ஈடுபட்டவர்.

அவருக்கு இந்தப் பின்புலத்தைத் தந்தது குரும்பசிட்டி கிராமத்தின் நீண்ட கல்விப் பாரம்பரியமும், கலைப் பாரம்பரியமும் தான். பொன் பரமானந்தரால் பண்படுத்தப்பட்ட அம்மண்ணிலிருந்து வெளிவந்த 'ஈழகேசரி' கலை, இலக்கியம், அரசியல் எனப் பல்வேறு பரிமாணங் கொண்ட தமிழ் மக்களின் ஒரு சிறந்த ஆவணமாக இருந்துவருகிறது.

பொன. பரமானந்தர் ஆரம்பித்து வைத்த தளத்திலிருந்து கவிஞர் கந்தவனம், நாடக ஆசிரியர் ஏ. ரி. பொன்னுத்துரை, ஓவியத்திற்கு கலா கேசரி தம்பித்துரை, சிறுகதைக்கு கனக. செந்திநாதன் என்ற வரிசையில் புகைப்படம் தொல்பொருள் புலமையோடு கலைஞானி தோன்றினார்.

அவர் வன்னிக் காடுகளிலும் கூடத் தனது தேடுதலை மேற்கொண்டார். இவ்வாறாகத் தனக்கென வாழாது மக்களுக்காக வாழ்ந்த மாமனிதர் கலைஞானி அனைத்துப் பொதுமக்களாலும் என்றும் நேசிக்கப்பட வேண்டியவர் என்றார். (ஷ)

## கடனுதவி

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை மற்றும் உப அலுவலகங்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு பிரதேச சபையின் நிதி மூலம் இதுவரை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. (உ-232)

## முன்னோடிப் பரீட்சைகள்

(உடுவில்)

இவ்வாண்டு க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தெரிவித்தார்.

இவ்வாறாக 5 பரீட்சைகள் நடத்தி அவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-261)

## அனுமதி அட்டை படிவங்கள் அனுப்பிவைப்பு

(கோப்பாய்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட பாடசாலைகட்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-79)

## குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கள் எடுப்பதற்காக பனை மரத்தில் ஏறியவர் கால்தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் மேற்கில்நடந்த இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த க.கோவிந்தசாமி(வயது43) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவர். (இ-6)

## யாழ். மாநகர சபைக்கு புதிய உழவு இயந்திரம்

(அரியாலை)

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைச்சிலிருந்து யாழ். மாநகர சபைக்கு புதிய உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட விருப்பதாக மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்துள்ளார்.

தற்போது 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான 'ஒட்டோ' வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-225)

## அராலி உபஅலுவலக கட்டட புனரமைப்புக்கு 2 1/2 இலட்சம் ஒதுக்கீடு

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அராலி உபஅலுவலகக்கட்டடத்தினைச் செப்பனிட்டு புனரமைப்புச் செய்வதற்கு $2\frac{1}{2}$ இலட்சம் ரூபா பிரதேசசபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேசசபை தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட, இதுவரைதிருத்தப்படாத வீதிகள் திருத்துவதற்கான தார்பரல்களை கொள்வனவுசெய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் தார்பரல்கள் வந்துசேர்ந்துவிடுமெனவும், அதன்பின் வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஷ-232)

## கோப்பாயில் தொடரும் வழிப்பறி கொள்ளைகள்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதிகளில் வழிப்பறிக்கொள்ளைகள்சமீபகாலமாக வெகுவேகமாக அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கோவிலுக்குசென்ற குடும்ப பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் ஒருவன் அறுக்க முற்பட்டவேளையில் அப்பெண் கூக்குரலிடவே சங்கிலியுடன் இணைக்கப்பட்ட பதக்கத்துடன் திருடன் தப்பியோடிவிட்ட சம்பவம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதியில் இருபாலைச்சந்திப்பகுதியில் சைக்கிளில் தனியாக வீடு நோக்கிச்சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தரின் சைக்கிள் மறிக்கப்பட்டு அவரிடமிருந்த சிறு தொகைப்பணம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம்சில தினங்களுக்கு முன் இடம்பெற்றது. (க-79)

## பன்னீராண்டுகளின் பின் புரட்சி கானங்களை கேட்டு பரவசமடைந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொது நூலகத்துக்கு முன்பாக சமாதானத்திற்கான மாபெரும் இசை நிகழ்ச்சியை தமிழீழ விடுதலைப்புலிகளின் இசைக் குழுவினர் சனியன்று நடத்தினர்.

இந்நிகழ்வில் சுமார் மூவாயிரம் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர். ஊர்காவற்றுறை பிரதேச மாவீரர்களான 2 ஆம் லெப் சுகர்த்தனா, முதலாம் லெப் வனஜா, 2 ஆம் லெப் அனோஜா ஆகியோரின் குடும்பத்தவர்களின் பொது ஈகைச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது.

நிகழ்ச்சியில் தமிழீழ எழுச்சிக்கானங்கள் இசைக்கப்பட்டன. அப்போது மக்கள் தம்மிடங்களைவிட்டு நகராது மெய்சிலிர்த்து எழுச்சியுடன் பாடல்களைகேட்டு உணர்வு பூர்வமாக கலந்திருந்தனர்.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்களான பாப்பா, கலைபண்பாட்டுப்பொறுப்பாளர்நிரோஜன் ஆகியோர் கலந்து 'புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் தீவகநிலை' எனும் சாராம்சத்தில் சிறப்புரை நிகழ்த்தினர்.

சுமார் 12 வருடங்களின் பின் நடந்த ஓர் இன்னிசை நிகழ்ச்சி இதுவென பார்வையாளர்கள் பலராலும் கூறப்பட்டதை கேட்கக்கூடியதாக இருந்தது. (உ)

## வேலணையில் ஆசிரியர் நிலையம்

யாழ். மாவட்டத்திற்கு எனப் பொதுவாக தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதியில் ஆசிரியர் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி ஆசிரியர் நிலையம் வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ள யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. (க-75)

# 10 மில்லியன் கண்ணி வெடிகளின் ஆபத்தை எதிர்கொள்ளும் ஆப்கான்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளை அப்புறப்படுத்துவதற்கு அனைத்துலக நாடுகளும் உதவிகள் வழங்க வேண்டுமென ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் அப்துல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

காபூல் நகரில் தற்போது நடைபெற்று வரும் நிலக்கண்ணி வெடிகள் தொடர்பான அனைத்துலக மாநாட்டின் தொடக்க வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தகமையத் தாக்குதலைத் தொடர்ந்து ஆப்கான் மீதான தாக்குதலை அமெரிக்கா நடத்தியவேளையிலேயே சுமார் 10 மில்லியனுக்கு அதிகமான நிலக் கண்ணிகள் அங்கு புதைக்கப்பட்டன.

இதேவேளை நிலக்கண்ணி வெடிகளை தடை செய்யும் அனைத்துலக உடன்படிக்கையில் வெகு விரைவாக இணைய உத்தேசித்துள்ளதாகவும் ஆப்கான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிலக் கண்ணி வெடிகளினால் ஆப்பானில் மாதாந்தம் 300 பேர் இறக்கின்றனர். அத்துடன் நூற்றுக் கணக்கானோர் அங்கவீனர்களாகின்றனர் என ஆப்கான் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

(உ-8)

## உலக தரிசனம்

# யூதக் குடியிருப்பாளர்களின் துப்பாக்கி வேட்டில் பலஸ்தீன சிறுமி பலி

(ஜெருசலேம்)

மேற்குக்கரை ஹெப்ரோனில் பலஸ்தீன சிறுமி ஒருத்தி யூதக் குடியிருப்பாளர்களின் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்.

யூதக் குடியிருப்பாளர்கள் வீதிகளின் வழியே துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துக் கொண்டுசென்றசமயம் தனது வீட்டில் இருந்த பிரஸ்தாப சிறுமிசூட்டுக்குஇலக்காகி அவ்விடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

(உ-8)

# ஹமாஸ் இயக்க முக்கிய தலைவர் கைது

(ரெல்அவிவ்)

பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவரையும் அவரது இராணுவ உதவியாளர் உட்பட 4 பேரையும் கைது செய்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவ வட்டாரஙகள தெரிவித்துள்ளன.

இவர்கள் பலஸ்தீன மேற்குக் கரைநகரமான றபழாவில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில்ஹமாஸ் இயக்கத்தின் இராணுவ பிரிவுத் தலைவர் ஒருவர் விமானத் தாக்குதலின் போது கொல்லப்பட்டதும், கைதான மேற்படி ஹமாஸ் இயக்கத்தவர்களை இஸ்ரேலியர்கள் நீண்டகாலமாக இலக்கு வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# இங்கிலாந்து, வேல்ஸில் 800 சிறைக் கைதிகளை விடுவிக்க உத்தரவு

(லண்டன்)

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் சிறைவைக்கப்பட்ட 800 பேரைவிடுதலை செய்யுமாறு மனிதஉரிமைகளுக்கான ஐரோப்பியநீதிமன்றம தீர்ப்பளித்துள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் தண்டனைக்காலம் முறையற்றவகையில் நீடிக்கப்பட்டதனாலேயே நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

சிறைகளில் இருந்தபோது மேற்குறிப்பிட்ட கைதிகள அனைவரும் துர்நடத்தைகளில் ஈடுபட்டு வந்ததனாலேயே குறிப்பிடப்பட்ட கைதிகளின் தண்டனைக் காலம் நீடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கைதிகளின் தண்டனைக் காலத்தை இத்தகைய காரணங்களைக்காட்டி நீடிப்பது பொருத்தமற்றது என ஐரோப்பிய நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

(க-08)

# பாகிஸ்தானில் குடியமர அனுமதிக்கக் கோரிக்கை

(டாக்கா)

பங்களாதேஷில் வாழும் உருதுமொழிபேசும் மக்களின் தலைவர்கள், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் பங்களாதேஷ் வரும்போது, அவருடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்என மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மிஹாரிப் எனப்படும் இவர்கள் பாகிஸ்தானுக்கு மீண்டும் தாங்கள்சென்று மீளக்குடியமரபங்களாதேஷ், பாகிஸ்தான் நாடுகள் அனுமதி தரவேண்டும்என கடந்த காலங்களின்போது வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப்புக்கும், பங்களாதேஷ் பிரதமர் பேகன் ஹலிதர் ஜியாவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களின்போது மிஹாரிகளின் நிலைகுறித்து ஆராயப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட நாடுகளின் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

1971 ஆம் ஆண்டில் பங்களாதேஷ் சுதந்திரமடைந்த போது அங்கு அசப்பட்ட சுமார் 3 இலட்சம் மிஹாரிகள் பாகிஸ்தானுக்கு திருப்பியனுப்பும்படி கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# அல்ஜீரியாவில் பத்திரிகை நிருபர் குத்திக்கொலை

(அல்ஜீரியஸ்)

அல்ஜீரியாவின் தலை நகரில் அந்நாட்டு பத்திரிகை நிருபர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம்இனம்தெரியாதோரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

1993 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அல்ஜீரியாவில் 41 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-08)

# கூ. தொ. ச. கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசு வீண் பழிகளைச் சுமத்தி வருவதாக கூட்டுறவுத் தொழிற் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு தாம் பூரண ஆதரவு வழங்கப் போவதாகவும் சங்கம் அறிவித்துள்ளது.

(உ)

# பங்களாதேஷில் மாணவர்கைதின்எதிரொலி பல்கலை. மூடப்பட்டது

(டாக்கா)

பங்களாதேஷின் டாக்கா பல்கலைக்கழகம் கடந்த சனிக்கிழமைமுதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று பல்கலைக்கழக விடுதிக்கு சென்ற பங்களாதேஷ் பொலிஸார்மாணவிகளை கைது செய்தது தொடர்பாகவே பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில்மேலும் அமைதியின்மையும்வன்செயல்களும்வெடிக்கலாம்என்ற காரணங்களினால் அங்குகூடுதலானபாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பங்களாதேஷ்பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும்மாணவர்கைது செய்யப்பட்டமைக்கானகாரணம் குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

(க-08)

# ஜெயலத் வீரக்கொடி லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் விசாரணைக்கு சமுகமளிப்பு

(கொழும்பு)

முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல்ஜயலத் வீரக்கொடி நேற்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின்விசாரணைக்குச் சமுகமளித்தார்.

விமானப்படைத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் சொந்தப்பாவனைக்காக அதிநவீன ஆடம்பரக்கார்ஒன்றை பல இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்தார் என இவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுங்கத்தீர்வை இல்லாமல் 30இலட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை கொள்வனவுசெய்வதற்குமாத்திரமே முப்படைத் தளபதிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டது.

ஆனால், வீரக்கொடி 70 இலட்சம் ரூபாவை தனது வாகனத்திற்காக செலவுசெய்தார் என ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுமுன்சமுகமளிக்குமாறு அறிவித்திருந்த போதும் சுகவீனம் காரணமாக தன்னால் சமுகமளிக்க முடியாது இருப்பதாக மருத்துவ அறிக்கையினை இவர் அனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# 22 ஆரம்பப் பாடசாலைகள் மூடப்பட்டன

(கொழும்பு)

கேகாலை கல்வி வலயத்தில் 22ஆரம்பப் பாடசாலைகள் இதுவரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க பெற்றோர் காட்டிவரும் ஆர்வம் காரணமாகவே, கிராமப் புறங்களிலுள்ள மேற்படி 22 பாடசாலைகளும் மூடப்பட்டதாக தெரியவருகிறது.

(உ)

# சொத்து விபரங்களை வெளியிட அமைச்சர்கள் பின்னடிப்பு

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் தமது சொத்துக்களைப் பிரகடனம் செய்வதில் தாமதம் காட்டி வருகின்றனர்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வருடாவருடம் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டும் என்பது சட்டமாகும்.

இவ்வகையில், அமைச்சர்கள் ஜனாதிபதியிடமும் பாராளுமன்றஉறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திடமும் அவ்வவ் வருடம் ஜுன் மாதம்30 ஆம் திகதிக்கு முன்னர் சொத்துக்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 35 அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் தமது சொத்து விபரங்களைக் கையளித்துள்ளனர்.

இதேவேளை, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா, ஆகியோர் மீது பொதுஜன ஐக்கிய முன்னணியினரும்,

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஜனாதிபதி ஆகியோர் மீது ஆளும் கட்சியினரும் பரஸ்பரம் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## போரும்சமாதானமும்

துடித்துக் கொண்டிருக்கிறான், அடுத்தவன் அவனுக்கு ஆறுதல் சொல்லுகிறான்: எப்படித் தெரியுமா? ஏனடா இப்படித் துள்ளுகிறாய்? அங்கேபார். தலையே போனவர்கள் எல்லாரும் அசையாமல் கிடக்கிறார்கள். நீ கேவலம் கை போனதுக்காக இப்படித் துடிக்கிறாயே? என்றானாம், அந்த அளவுக்கு ஆகிவிட்டது மனிதாபிமானம். ●

தென்கச்சிகோ. சுவாமிநாதன்


## சமஸ்டி சுதர்சன ஹோமம்

இடம் - ஸ்ரீராகவேந்திர மிருத்திகா, கோவில் வீதி, நல்லூர்.

காலம் - 04 08 2002 ஞாயிற்றுக்கிழமை

நேரம் - காலை 7.00 மணி தொடக்கம் 12.00 மதியம் வரை

நோக்கம் - நாட்டு மக்களுக்கு சமாதானம் சுபீட்சமான வாழ்வு.

பலன் - கிரகசாந்தி, தீர்க்காயுசு, தீர்க்க மாங்கல்யம், வித்தியானுகூலம், குடும்பஐக்கியம், செவ்வாய் தோசம், சனிமாற்ற தோசங்கள் நிவர்த்தி, மாங்கல்ய தடை நீங்கல்.

குறிப்பு - நீங்கள் ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்து உங்கள் கையினால் நவதானியம், பட்டு, சமித்து, நெய், தேன் போன்ற ஹோமத்திரவியங்களை அக்கினியில் ஆகுதி செய்து உங்கள் மனக்கவலையை, தோசங்கள் பிணி, பீடை நீக்கி சகல ஐசுவரியங்களையும் பெற்றுவாழ தரிசியுங்கள்.

'சுவாமி பிரபாகரானந்த சரஸ்வதி சுவாமிகள்'

செயலாளர் - சந்நியாச சபை - கேரளா

ஸ்தாபகர் - ஐயப்பமிஷன் - இந்தியா

★ இன்றுவரை இலங்கையில் சுவாமிகளால் இருபத்தியேழு(27)யாகங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

(சி-4770)

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

குறள்

வலம்புரி

## ஹக்கீமின் மாற்றம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அண்மைக் காலப் போக்கு மீண்டுமோர் சமாதானக் குழப்பத்தை ஏற்படுத்தும் போல் தோன்றுகிறது.

அரசாங்கத்தை அமைக்கும் ஆற்றல் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இப்போது சமாதானப்பேச்சு வார்த்தையில் பேரம் பேசும் ஆற்றலையும் கொண்டுள்ளதென பதுளையில் இடம்பெற்ற கட்சியின் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

கடந்த இருபது வருடங்களாகப்போராட்டம் நடத்தி இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், யுத்தநிறுத்தத்தை விடுதலைப்புலிகள்கடைப்பிடித்துவரும் இவ்வேளையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் கூட்டங்களில் பேசும் உணர்ச்சிமிக்க வார்த்தைகள் எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை எல்லா இனமக்களும் எல்லா உரிமைகளும் பெற்று வாழவேண்டுமென்பதில் இரு வேறு கருத்திற்கிடமில்லை. அவ்வகையில் முஸ்லிம் மக்களின் உரிமைகளும், சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும். அதனை உறுதிப்படுத்தும் பொறுப்பு முஸ்லிம் தலைவர்களுக்கு உண்டு.

ஆனால் முஸ்லிம்காங்கிரஸ் நாட்டில் ஆட்சியைத் தீர்மானிக்கின்றது. சமாதான முயற்சியில் பேரம் பேசும் ஆற்றலைக் கொண்டுள்ளது எனக் கூறுவதெல்லாம் ஏனைய இனமக்களிடையே சீற்றத்தையும், சினத்தையும் ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

கடந்த இருபது வருடகாலமாக யுத்தத்தின் கொடூரத்தால், மக்கள் பெரும் துன்பச்சுமையை அனுபவித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் அதனைத்தடுத்து நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவிக்கும் கருத்துக்கள் மக்களின்துன்பச்சுமையை மேலும் உயர்த்துவதாகவே அமையும்.

# ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத்திட்டம் மூலம்
# மலேரியாவைக் கட்டுப்பாட்டில் வைக்கலாம்

**மருத்துவ விளக்கம்**

உலகளாவிய ரீதியில் மலேரியா ஒரு பிரச்சினைக்குரிய நோய் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். இது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலங்களில் தனது தாக்கத்தைக் காட்டியுள்ளது. எனவே இதனைத் தடுக்கவெனப் பல்வேறு வழிகளில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. ஆனால் மலேரியாவைப் பூரணமாக ஒழிக்க முடியவில்லை. கட்டுப்பாட்டுக்குள் மட்டும் வைத்திருக்க முடிகிறது. மலேரியாவை வராது தடுக்கவென முற்கூட்டியே தடுப்பூசி போடுவது சிறந்ததென்று ஆலோசிக்கப்பட்டு, SPF 66 என்பது உட்பட பல தடுப்பூசி வகைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டன. ஆனால் வெற்றி கிடைக்க வில்லை. இந்த வகையில் உலகசுகாதார நிறுவனத்தால் (W.H.O) இன்று மலேரியாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவென, அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவதுதான் ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டநடவடிக்கையாகும்.

ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டமென்பது மலேரியா காவி நுளம்புகளை அதன் குடம்பி, நிறையுடலி நிலைகளில் ஒரே நேரத்தில்பல்வேறு கட்டுப்பாட்டு முறைகளையும் ஒருங்கிணைத்து, நடைமுறைப் படுத்தி, அழிப்பதாகும். இது நல்ல வெற்றியைத் தந்து கொண்டிருக்கிறது. உலகில் 3200 நுளம்பு இனங்கள் உண்டு. இவற்றில் அனோபிலிஸ் இனங்களில் 420உண்டு. இதில் உலகில் ஏறக்குறைய 60-70 இனங்கள் வரையில் மலேரியாவிற்கான காவிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் 22அனோபிலிஸ் இனங்கள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டு, அனோபிலிஸ் கியூலிசிபேசிஸ் மட்டுமே காவியென உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஆனால், அனோபிலிஸ்சப்பிக்ரஸ் அனோபிலிஸ் அனுலாரிஸ் உட்பட 14இனங்கள காவிகளாகத் தொழிற்படுவதாகச் சந்தேகிக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. ஆண் நுளம்புகள் தாவரச் சாற்றை உட்கொள்ள, பெண் நுளம்புகள் முட்டை விருத்திக்காகக் குருதியை உறுஞ்சுகின்றன. நுளம்பின் வாழ்க்கை வட்டத்தில், முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி என்றபருவங்கள உள்ளன. இவற்றில் குடம்பி, நிறையுடலிநிலைகளிலேயே தடுப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இலகுவானதாகும்,

மேற்கூறிய தகவல்களை வைத்துக் கொண்டு ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டம் எவ்வாறு ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது என்பதைப் பின் வருமாறு எமது பகுதிக்குஏற்ற வகையில் நோக்கலாம்.

நிறையுடலி நிலை

புகைபோடல், நுளம்புத்திரி பாவித்தல், நுளம்பு வலை பாவித்தல், இரசாயனக்கட்டுபாடு,

குடம்பி நிலை

உற்பத்தியாகும் இடங்களை இல்லா தொழித்தல், இயற்கைக்கட்டுப்பாடு, இரசாயனக் கட்டுப்பாடு.

என்பவற்றுடன் சுகாதாரக் கல்வியும் சேர்கின்றது.

வைத்திய கலாநிதி
க. தா. சிவபாதம்

குடம்பி நிலைக் கட்டுப்பாடு

### உற்பத்தித் தானங்களை இல்லாது செய்தல்

அனோபிலிஸ் நுளம்புகள் ஓரளவு தெளிந்த, ஆழங் குறைந்த, ஓரளவு சூரிய ஒளி படக் கூடிய நீர் நிலைகளில் முட்டையிடும். எனவே, அப்படியானஇடங்களை இல்லாது செய்யவேண்டும். அதாவது அப்படிப்பட்ட நீர் நிலைகளினை உற்பத்தியாவதற்கு ஏற்ற வண்ணம் இல்லாது செய்தல். உதாரணமாகவயல்களில் நீர், பாத்திகளில்மூன்று நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் தேங்கிவிடும் நிலையை மாற்றல், நீர்ப்பாசன வயல்களில் கசிவுகள், தடைகள் இல்லாது சீராக நீரை ஓடவைத்தல்.

இயற்கைக் கட்டுப்பாடு

குடம்பிகள் உள்ள நீர்நிலைகளில் திலாப்பியா (Thilapia) பொயிசிலியா (poecillia)கம்புசியா (Gambussia) போன்ற மீனினங்களைவிட்டால் அவை குடம்பிகளைஉணவாகஎடுத்துவிடும். எமது பகுதிகளில் யப்பான் மீன் (திலாப்பியா) கச்சல்பட்டியான்(பொயிசிலியா) கப்பிஸ்போன்றன பயன்படுத்தக் கூடிய மீனினங்களாகும்.

இதைவிட குடம்பிகளை அழிக்கக்கூடிய பற்றீரியாக்களை அந்நீர் நிலைகளில் பரப்புதல் நடைமுறையில் ஒன்றாகும்

இரசாயனக் கட்டுப்பாடு

அனோபிலிஸ் நுளம்புக் குடம்பிகள் உள்ள நீர் நிலைகளுக்கு அபேற்(Abate)எனப்படும் கிருமி நாசினியைத் தெளித்தல்.20 மி.லீ.அபேற் 9லீ தண்ணீரில் கலந்து விசிறப்படும். அனேகமாக30நிமிடங்களுக்குள் குடம்பிகள் பூரணமாக அழிக்கப்படும். இது மிகவும் சிறந்த முறை. ஆனால் அபேற் மிகவும் விலைகூடியதென்பதால் இக்கட்டுப்பாட்டு முறை சரிவர நெறிப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப் படவேண்டும்.

### நிறையுடலிக்கட்டுப்பாடு

புகைபோடல்

அனோபிலிஸ் நுளம்புஇனங்கள் பொதுவாக, மாலை 6 இரவு11 மணிக்கிடையிலும் காலையில்4-6 மணிக்குமிடையில் கடிக்கும். எனவே, அவ்வேளை எம்மைக் கடிக்கும் நிலையைத் தவிர்ப்பதற்காகப் புகைபோடலாம் (இதற்கு கஞ்சாங்கோரை, வேப்பம் விதை)வேப்பமிலை, மருதம் விதை, துளசி, நொச்சியிலை, யானை இலத்தி போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

நுளம்புத்திரி பாவித்தல்

இது எல்லோருக்கும் உகந்ததல்ல. (சுவாசம் தொடர்பான நோயுள்ளவர்கள்). தற்போது மின்சாரமூலம் பாவிக்கப்படும் நுளம்புத்திரியும் நடைமுறைக்கு வந்து விட்டது.

நுளம்பு வலை பாவித்தல்

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, நுளம்பு வலைக்குள் படுப்பதுசாலச் சிறந்தது. நுளம்புவலை வாங்கவசதியில்லாதவர்கள் காற்றோட்டமுள்ள துணிகளைக் கொண்டு வலையை உருவாக்கியும் பாவிக்கலாம். தற்போது மலேரியாத் தடுப்பு இயக்கத்தால் பேமத்திரின் (Permathrin) எனப்படும் கிருமிநாசினியால் மருந்தேற்றப்பட்ட நுளம்பு வலை பாவனைக்கு வழங்குவது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது மிகவும் பயன் தரும் திட்டம்.

இரசாயனக்கட்டுப்பாடு

அனோபிலிஸ் நுளம்புகள் எம்மைக்குத்த முதலும் சரி குத்திய பிறகும் சரி வீட்டின் உள்ளே இருளானமறை விடங்களில் ஓய்வெடுக்கும். இதை இல்லாது செய்யகூரை, சுவர், தளபாடங்களின் கீழ்ப்புறம் என்று வீட்டின் பகுதிகளுக்கு கிருமிநாசினி விசிறப்படும், இக்கிருமி நாசினி நுளம்பின் பாதங்களில் பட்டு அவற்றின் மூளைமையம் தாக்கப்பட்டு அவை அழிக்கப்படும் நிலை உருவாகும், கிருமிநாசினி விசிறப்பட்ட இடங்களில் நுளம்புகள் வர மாட்டாது. ஆரம்பத்தில் D.D.T. பாவிக்கப்பட்டு, அதற்கு நுளம்புகள் இசை வாக்கம் பெற்றதால் மலத்தியோன் பாவிக்கப்பட்டது. தற்போது இலங்கையின் பல பகுதிகளில் மலத்தியோனுக்குஇசைவாக்கமடைந்தமை கண்டுபிடிக்கப் பட்டதால் சுமித்தியோன், ஐகொன், டெல்டாமைத்திரின் எனப் பல கிருமிநாசினிகள் விசிறப்படுகின்றன-யாழ். குடாநாட்டிலும் ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

அனோபிலிஸ் சப்பிக்ரஸ், அனோபிலிஸ் வேக்ஸ்போன்ற இனங்கள் வீட்டின் உள்ளே தொங்கிக் கொண்டிருக்கும் உடுப்புக்கள் போன்ற இடங்களிலேயே ஓய்வெடுக்கும். எனவே, இவைதான் காவி என்றால் கிருமிநாசினி விசிறலால் இவை கட்டுப்படுத்தப் படாது.

சுகாதாரக் கல்வி

மலேரியா நோயின் தன்மை, உருவாகும் விதம், ஏற்படுத்தும் காரணிகள், அவற்றைக் கட்டுப்படுத்தல் என்று அனைத்து விடயங்களும் மக்களுக்கு பல்வேறு வழிமுறைகளிலும் அறிவூட்டப்படவேண்டும், இதற்கு மலேரியாத் தடுப்புப் பகுதியோ, சுகாதாரத் திணைக்களமோ மட்டும் அல்லாது பொதுமக்கள் உட்பட அனைவரதும் பூரண ஒத்துழைப்பும்மிக அவசியம். மக்கள் விழிப்புணர்வு பெற்று தாமாகவே மலேரியாவிலிருந்து தம்மைப்பாதுகாக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். உலக சுகாதாரஸ்தாபனம் கூறும் ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டத்தினை யாழ். குடா நாட்டிலும் திறம்பட அனைவரும் வழி நடத்த ஒத்துழைத்து மலேரியாத் தாக்கத்திலிருந்து விடுபடுவோம். ●

## தினசரி தியானம்

### ஆள் இல்லாத படகு

சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே.

-தாயுமானவர்

அஹங்காரம் அற்ற இடத்தில் அண்ணலே, நீ வீற்றிருக்கிறாய்,

படகு ஒன்றில் நிறையப் போக்கிரிகள்போய்க் கொண்டிருந்தார்கள். சினமும், சச்சரவும், செருக்கும் வடிவெடுத்தவர்கள் அவர்கள். அன்னவர் ஊர்ந்து சென்ற படகைக் காலிப்படகு ஒன்று மிதந்து கொண்டு வந்து மோதியது. அது மோதியதை முன்னிட்டு யாரும் மனத் தாங்கல் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அது ஓர் ஆளாவது ஊர்ந்த படகாயிருந்திருக்குமாயின் வம்பு மிக வந்திருக்கும், நமது மனம் என்ற படகில் ஆணவ, அஹங்காரம் என்ற ஆட்கள் இல்லாவிட்டால் நம்முடன் யாரும் சண்டைக்கு வர முடியாது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

(அரியாலை)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான 2002 ஆம் ஆண்டுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் 2003வரை மீண்டும் ஒத்திவைக்கப்படவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வமான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

மேற்படி உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் ஏற்கனவே 25.3.2002 இல் நடைபெறுவதாக இருந்து பின்னர் ஒக்டோபர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, 3 சுயேட்சைக் குழுக்கள் ஆகியன மேற்படி தேர்தலில் போட்டியிட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-225)

# யாழ். மாநகர சபைப் பகுதியில்
# பழுதான ஜாம் உண்டவர்கள் வயிற்றோட்டத்தால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் விற்பனை செய்யப்பட்ட ஜாமை வாங்கிச் சாப்பிட்டவர்கள் பலர் வயிற்றோட்டம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விடயம் குறித்து பொதுமக்களை மிகவும் விழிப்பாக இருக்குமாறும், சுகாதார சீர்கேடான உணவு பொருட்களை வாங்கிப் பயன்படுத்த வேண்டாமெனவும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.மரியதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியாவில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த ஜாம் தகுந்த முறையில் பொதி செய்யப்படாததால பழுதடைந்து உள்ளதாகவும் அதன் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாநகர சபையின் உணவுப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார். (இ)

## டாக்டர் றெஜிபெரேரா மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(மந்திகை)

சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜிபெரேரா, மற்றும் அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர்.

முற்பகல் 10மணிக்கு அங்கு சென்ற இவ் அதிகாரிகள் குழுவினரை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிர்வேற்பிள்ளை வரவேற்று அழைத்துச் சென்றார்.

வைத்தியசாலை விடுதி அறைகள், மனநோயாளர் சிகிச்சைப் பிரிவு என்பவற்றைப் பார்வையிட்ட வைத்திய அதிகாரிகள் வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறைகள், மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை வைத்தியசாலையின் புனரமைப்பு அபிவிருத்தி குறித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சின் செயலாளர் றெஜி பெரேரா உறுதியளித்துள்ளார். (இ-23)

உ
சிவமயம்



சுவாமி பிரபாகரானந்த சரஸ்வதி சுவாமிகள்
கேரளா

இமய மலையில் அமைந்துள்ள சிவானந்தர் ஆச்சிரமத்தோடு இணைந்த கேரளா மாநிலத்தில் சந்நியாச சபையின் செயலாளரும், ஐயப்ப மிஷன் ஸ்தாபகருமான "சுவாமி பிரபாகரானந்த சரஸ்வதி சுவாமிகள்" யாழ் மக்களின் வேண்டுகோளிற்கு செவி சாய்த்து இவ்விடம் வருகை தந்துள்ளார்.

யோகா, வேதாந்தம், த்யானம், குடும்ப,வீடயங்கள் ,கிரக தோசங்கள், வியாபார மேன்மை மற்றும் ஆலோசனைகளுக்கு 06.08.2002க்கு முன் கீழ்க் காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ ராகவேந்திரா மடாலயம்
கோவில் வீதி,
நல்லூர் – யாழ்ப்பாணம்.
[C/4773]

யாழ். போதனா வைத்தியசாலை
பதவி வெற்றிடம்

சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி றெஜி பெரேரா அவர்களின் பணிப்பின் பேரில் யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளரால் பின்வரும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1] வைத்திய நிபுணர்
2] வைத்திய உத்தியோகத்தர்
3] பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்
4] உதவி வைத்தியர்
5] ...

## நல்லூர் மகோற்சவ ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 13ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 26 நாட்கள் நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான பூர்வாங்க ஆலோசனைக் கூட்டமொன்று நாளை 31ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாநகர முதல்வர் செ.கந்தையனின் தலைமையில் நல்லூர் பண்டார மாளிகை வளவிலுள்ள மாநகர ஆணையாளரது அலுவலகத்தில் இடம்பெறும் என யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.மரியதாஸ் அறிவித்துள்ளார்.

## ஆங்கிலப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்பாணம்)

மாவட்ட ரீதியாக எதிர்வரும் 2ந திகதி நடத்தப் படவிருந்த மாகாணமட்ட ஆங்கில தினப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (இ)

## ஆனைக் கோட்டையில் வாந்திபேதி

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நபரொருவர், கொலராவினால் (வாந்திபேதி) பாதிப்படைந்து, யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் கொலரா நோயின் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் சுகாதார முறைகளைப் பின்பற்றி நோய் அபாயத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே.கணேஸ்வராஜா அறிவித்துள்ளார். (இ-252)

## நேற்று இடம்பெற்ற வாகன விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இருவர் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள

## வவுனியா விகாரையில் அலங்கார வளைவை புலி உறுப்பினர் திறந்து வைத்தார்

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் உள்ள போதிதட்சனாராம விகாரையில் அமைக்கப்பட்டுள்ள வெளிச்சக் கூட்டு அலங்கார பந்தலை தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரி.மேலவன் நேற்று இரவு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

போதிதட்சனாராம விகாரையின் பிரதமகுரு சங்கைக்குரிய விமலசாரா தேரரின் அழைப்பினை அடுத்து ரி.மேலவன் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்

வவுனியா போதிதட்சனாராம விகாரையில் கடந்த 23ம் திகதி முதல் நடைபெற்று வந்த எசலபெரகர உற்சவத்தின் இறுதி நாள் வைபவமான நேற்றைய தினமே இந் நிகழ்வு இடம்பெற்றது. (ம)

### சுவிற்சலாந்தில்...

டிக்கைகள் குறித்தும் வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் முடிவில் ஐ. நா செயலர் கோபிஅனான், இந்தியப் பிரதமர் வாஜ்பாய், இந்தியத்துணைப் பிரதமர் அத்வானி, மற்றும் மனித உரிமை அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன. (த)

### யாழ் பல்கலைக்கழக...

சமர்ப்பிக்குமாறு நீதிபதி இ.த. விக்னராஜா யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பான குற்றப் பத்திரிகை குற்றவியல் வழக்கின் கீழ் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-6)

### வேலணை...

படையின் இச் செயலை கண்டித்து தீவக மக்கள் ஒன்று திரண்டு மாபெரும் பேரணி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-75-201)

### அமைச்சர்களின்...

எனது கைப்பையினுள் வெடிகுண்டு இருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்நிலைமை பிரதமர் ஒருவருக்கு உசிதமானது அல்ல என்றும் ஜனாதிபதி அக்கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

### ரவி கருணாநாயக்க ...

ரின் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கருணாநாயக்காவின் அமைச்சை பறிப்பதறகான நடவடிக்கைகளில் ஜனாதிபதி தீவிரமாக இறங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### யாழ். வரும்...

உட்பட பன்னிரு போராளிகளின் நினைவுத்தூபி மற்றும் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியில் அமைந்துள்ள வீடு ஆகியவற்றை பார்ப்பதில் தீவிர அக்கறையும் விருப்பமும் காட்டி வருகின்றனர்.

இதேவேளை புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து தென்பகுதி மக்கள் வடபகுதிக்கு வருவது அதிகரித்துள்ளது. (இ-23)

### பொதுமக்கள் மீது பொலிஸார்...

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது தியாகராசா குமரன் (வயது 18), எம். விஜயராசா (வயது 18) எஸ். பேரின்பம் (வயது 54) நடராசா வரதன் (வயது 19) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கிருஸ்ணபிள்ளை சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பொலிஸாருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தினுள் அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்டபோதே ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து இச் சம்பவம் தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கண்ணீர் அஞ்சலி

எமது வலம்புரி நிறுவனத்தின் அலுவலர்
திரு. ந.தட்சனேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா நடராஜா**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்...

1] வைத்திய நிபுணர்
2] வைத்திய உத்தியோகத்தர்
3] பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்
4] உதவி வைத்தியர்
5] துணைநிலை வைத்திய சேவை —
   1) வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர்
   2) கதிரியக்க படப்பிடிப்பாளர்
   3) இயன் மருத்துவ சேவையாளர்
6] தாதிய உத்தியோகத்தர்

இவர்கள் மீள் நியமனம் செய்யப்படுமிடத்து பொது சுற்று நிருப இலக்கம் 7/2002 இன் படி இவர்களுக்கு ஓய்வூதியத்துடன் கடைசியாகப் பெறப்பட்ட சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பங்களை நேரிலோ கடித மூலமோ பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கலாம்.

*போதனா வைத்தியசாலை* வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகன்
*யாழ்ப்பாணம* [C/4771] *பணிப்பாளர்.*

## வைத்தியசாலை சுத்திகரிப்புச் சேவை

யாழ். போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்புச் சேவையை 1/9/2002 இல் இருந்து தனியார் துறையினரிடம் கொடுப்பதற்கான விண்ணப்பம் பணிப்பாளரால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவுத் திகதி | : 15.08.2002 காலை 10.00மணி |
| தேவையான ஊழியர் எண்ணிக்கை | : 10 பேர் |
| மேற்பார்வையாளர் | : 01 |
| சுத்திகரிப்பு செய்யும் தடவைகள் | : 04 தடவை |

மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் தொடர்பு கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகன்
பணிப்பாளர்
போதனா வைத்திய சாலை,
யாழ்ப்பாணம்.
[C/4772]

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இருவர் யாழ் போதனா வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த ஆ.பரமதாஸ்(வயது 32), ஜே.ரமேஸ்(வயது 35) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

★(யாழ்ப்பாணம்)★

சாவகச்சேரியில் நேற்றைய தினம் ஆட்டோவும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி அரசடி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ரி.திருக்குமார் (வயது 22) என்பவரே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவர்.

(த-02)

## புலோலி இளைஞன் படுகாயம்

(தும்பளை)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததினால் ஏற்பட்ட விபத்தில் புலோலி கிழக்கைச் சேர்ந்த கே.நந்தகுமார்(வயது 25) என்ற இளைஞன்படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கபபட்டுள்ளார்.

பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்திக்கருகாமையில் இவ் விபத்துச சம்பவம் இடமபெற்றுள்ளது.

(ந-245)

## கந்தையா நடராஜா

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலம்புரிக் குடும்பம்**

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா (பெ.க)

(முன்னாள் பிரபல கண்டிப் புகையிலை சுருட்டு வர்த்தகர்)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா 29.07.2002 நேற்று திங்கட்கிழமை காலமாகி விட்டார். அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும், கோகிலகானம் (ஜேர்மனி), தட்சனேஸ்வரன் (வலம்புரி), பிறேமகானம், விஜயகானம்(ஜேர்மனி), தயானேஸ்வரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பென்றோ, அற்புதமலர் (சாந்தினி), பாலரட்ணம், சுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், டயானா, விக்ரோறியா, சபிதா, பாலகௌரி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தையல்முத்து, பூரணம், பாக்கியம், சின்னத்தங்கம், பாலசுப்பிரமணியம், கனகலிங்கம், முத்துக்கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.07.2002 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி**
**உரும்பிராய் கிழக்கு**
**உரும்பிராய்**

**தகவல்**
**ந.சிவக்கொழுந்து**
**(மனைவி)**

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.